# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

மனு எண். 079/நகராட்சி/2019
நாள் : 13/05/2019

திருமதி S. சாயின் பானு,
சென்னை – 600 044. — முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள்,
பல்லவபுரம் நகராட்சி. — எதிர் மனுதாரர்கள்

சென்னை, குரோம்பேட்டை, தி.சு. லட்சுமணன் நகர், இரண்டாவது தெரு, 3/40 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி S. சாயின் பானு அவர்கள் மேதகு ஆளுநர் அவர்களுக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட 08.05.2019 நாளிட்ட மனுவின் நகல் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 79/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட மனு பரிசீலிக்கப்பட்டுக் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, குரோம்பேட்டை, தி.சு. லட்சுமணன் நகர், இரண்டாவது தெரு, 3/40 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி S. சாயின் பானு என்பவர், தனது வீட்டிற்கு வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார். அம்முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, மனுதாரர் விசாரிக்கப்பட்டு 11.04.2019 நாளன்று 11/2016 எண்ணிட்ட ஆணை வெளியிடப்பட்டது. மனுதாரர் மேல்முறையீடு செய்துள்ள மனுவின் நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கும் முகவரியிட்டு அனுப்பப்பட்டுள்ள நிலையில், அம்மனு சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது எனத் தெரிவித்து அவ்வாறே முடிவு செய்து முடித்து வைக்கப்படுகின்றது.

2019–ஆம் ஆண்டு, மே திங்கள், 13–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

16/5/19

பெறுநர்

திருமதி S. சாயின்பானு,
எண்.3/40, 2–வது தெரு, தி.சு. லட்சுமணன் நகர்,
குரோம்பேட்டை, சென்னை – 600 044.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி